**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி.**

**முன்னிலை:- திரு.எம். ரவிச்சந்திரன், பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, திருத்துறைப்பூண்டி.**

2057 திருவள்ளுவராண்டு, ஸ்ரீ விசுவாவசு வருடம், பங்குனி மாதம் 12ம் நாள்

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 26ம் நாள் வியாழக்கிழமை

இயக்கவூர்திகளின் விபத்து இழப்பீடு கோருரிமை அசல் மனு எண்.204/2023

(CNR No.TNTV14-001289-2023)

அலமேலுமங்கை ........மனுதாரர்

எதிராக

1) துரை

2) தி நியூ இந்தியா அசூரன்ஸ் கம்பெனி லிமிடெட், மதுரை. ........எதிர்மனுதாரர்கள்

இந்த மனுவானது கடந்த 24.03.2026ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக வரப்பெற்று மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.தமிழரசன், பி.எஸ்ஸி., பி.எல்., அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வருகையில்லா தரப்பினராக தீர்மானம் செய்யப்பட்டும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் திரு.ஆர்.திருநாவுக்கரசு, அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலும் இருந்து வந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் இன்று வழங்கும்........

**உத்தரவு**

கடந்த 02.05.2015ம் தேதி அதிகாலை 1.00 மணியளவில் முத்துப்பேட்டை பைபாஸ் ரோட்டில் நடந்த சாலை விபத்தில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக ரூ.15,00,000/- பின்வட்டி மற்றும் செலவுத் தொகையுடன் எதிர்மனுதாரர்களிடமிருந்து கிடைக்க கோரி மோட்டார் வாகன சட்டம் பிரிவுகள் 140 மற்றும் 166-ன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளார்.

**2. மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம் :-**

விபத்தில் காயம்பட்ட மனுதாரரான அலமேலுமங்கை என்பவர் 42 வயதுடையவர் என்றும், விபத்து சமயத்தில் திருநெல்வேலி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைகழகத்தில் உதவி பேராசிரியராக வேலை செய்து மாதம் ரூ.65,043/- சம்பாதித்து வந்தார் என்றும், இந்நிலையில் கடந்த 02.05.2015ம் தேதி அதிகாலை 1.00 மணியளவில் பதிவு எண்.TN 04 J 9393 என்ற காரில் பயணியாக பயணம் செய்தார் என்றும், மேற்படி கார் முத்துப்பேட்டை மெயின் ரோடு பைபாஸ் சாலை அருகில் சென்ற போது மனுதாரர் பயணம் செய்த கார் பழுதடைந்துவிட்டதால் மேற்படி காரை சாலை விதிகளை அனுசரித்து சாலை ஓரம் நிறுத்திவிட்டு மற்றொரு கார் பதிவு எண்.TM 10 E 2265 என்ற காரை மேற்படி காருடன் டோ செய்து கொண்டிருந்த போது அது சமயம் பின்னால் வந்த TN 31 AJ 6798 என்ற பதிவெண் கொண்ட டேங்கர் லாரியை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து சாலை ஓரம் நிறுத்தியிருந்த காரின் மீது மோதியதில் மனுதாரருக்கு பலத்த காயங்கள் ஏற்பட்டது என்றும், குறிப்பாக மனுதாரருக்கு கழுத்து

எலும்புகள் பாதிக்கப்பட்டு எலும்பு முறிவு ஏற்பட்டு முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்டது என்றும், மற்றும் உடம்பு முழுவதும் சிராய்ப்பு காயங்கள் ஏற்பட்டன என்றும், உடனே அடிபட்ட மனுதாரரை திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனைக்கு சென்று முதலுதவி சிகிச்சை செய்து அதன் பின்னர் திருவாரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை செய்து கொண்டார் என்றும், பின்னர் மனுதாரர் மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் MVK மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு அங்கு 04.05.2015ம் தேதி முதல் 10.05.2015ம் தேதி வரை உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார் என்றும், அதன் பின்னர் விடுவிக்கப்பட்டு நாளது வரை அதே மருத்துவமனையில் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்று வந்தார்.

ii) இந்த விபத்து TN 31 AJ 6798 என்ற பதிவெண் கொண்ட டேங்கர் லாரியை ஓட்டி வந்த ஓட்டுநரின் அதிவேகத்தாலும், அஜாக்கிரதையாலும் ஏற்பட்டது என்றும், முத்துப்பேட்டை காவல் நிலைய குற்ற எண்.185/2015 பிரிவு 279, 337 இ.த.ச.வின் படி வழக்கு பதிவு செய்யப்பட்டு வழக்கு திருத்துறைப்பூண்டி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

iii)விபத்திற்கு முன்பு மனுதாரர் திடகாத்திரமாகவும், சுறுசுறுப்பாகவும், ஆரோக்யமாகவும் செயல்பட்டு வந்தார் என்றும், விபத்தில் ஏற்பட்ட காயங்களால் தீராத வலியும், தொந்தரவும் இருந்து வருகிறது என்றும், விபத்தில் ஏற்பட்ட காயங்களால் பெருத்த மன உளைச்சலுக்கும், மனத்துன்பத்திற்கும் ஆளாகி உள்ளார் என்றும், எனவே ரூ.15,00,000/- நஷ்ட ஈடு கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

iv) விபத்தை ஏற்படுத்திய டேங்கர் லாரி TN 31 AJ 6798 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது என்றும், 2ம் எதிர்மனுதாரரிடம் மேற்படி டேங்கர் லாரி காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி லாரியை விபத்து சமயம் ஓட்டிய ஓட்டுநர் 1ம் எதிர்மனுதாரரால் பணியில் அமர்த்தப்பட்டவர் என்றும், எனவே எதிர்மனுதாரர்கள் தனித்தனியாகவோ, கூட்டாகவோ இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் ஆவார்கள்.

**3. 2ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம் :-**

மனுவில் உள்ள குற்றச்சாட்டுகளில் வெளிப்படையாக ஒப்புக் கொள்ளப்பட்டவை தவிர வேறு எதையும் இந்த 2ம் எதிர்மனுதாரர் ஒப்புக் கொள்ளவில்லை என்றும், மேலும் மனுதாரர் அதற்கான ஆதாரத்தை நிரூபிக்க வேண்டும் என்றும், கடந்த 02-05-2015 அன்று TN 31 AJ 6798 என்ற எண் கொண்ட விபத்துக்குள்ளான வாகனம், விபத்து நடந்த தேதி மற்றும் நேரத்தில் இந்த 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தால் முறையாக காப்பீடு செய்யப்பட்டது என்பதற்கும், வாகனத்தை ஓட்டிய ஓட்டுநருக்கு செல்லுபடியாகும் மற்றும் பயனுள்ள ஓட்டுநர் உரிமம் இருந்தது என்பதற்கும், செல்லுபடியாகும் RC மற்றும் அனுமதியுடன் இருந்தது என்பதற்கும் எவ்வித ஆவணங்களையும் முன்னிலைப்படுத்தவில்லை என்றும், இந்த 2ம் எதிர்மனுதாரர் பொறுப்பு காப்பீட்டுக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது என்றும், இந்த விபத்தில் தொடர்புடைய TN 31 AJ 6798 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் உரிமையாளர் காப்பீட்டுக் கொள்கை மற்றும் மோட்டார் வாகன சட்டத்தில் உள்ள எந்தவொரு பாலிசி நிபந்தனைகளையும் மீறினால், இந்த 2ம்

எதிர்மனுதாரர் மனுதாரருக்கு இழப்பீடாக எந்தத் தொகையையும் செலுத்த வேண்டிய அவசியமில்லை.

ii) 02-05-2015 அன்று அதிகாலை 01:00 மணியளவில், மனுதாரர் பதிவு எண் TN 10 E 2265 கொண்ட காரில் பயணித்தபோது, கார் முத்துப்பேட்டை பிரதான சாலையைக் கடக்கும்போது, கார் இயந்திரக் குறைபாட்டை சந்தித்ததாகவும், எனவே பதிவு எண் TN 04 J 9393 கொண்ட மற்றொரு வாகனத்தால் இழுத்துச் செல்லப்பட்டதாகவும், அது முதல் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநரால், வேகமாகவும் அலட்சியமாகவும் வந்து மோதியதாகவும் கூறப்பட்டதை மறுக்கிறார் என்றும், மேலும், மனுதாரர் பயணித்த காரின் ஓட்டுநரின் அலட்சியமும், இருபுறமும் போக்குவரத்தை கவனத்தில் கொள்ளாமல் வாகனம் ஓட்டிய டோவிங் தான் இந்த தேவையற்ற விபத்திற்கு வழிவகுத்தது என்றும், மேலும், மேற்படி ஓட்டுநர்கள் செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனங்களை ஓட்டினார்கள் என்றும், இது மோட்டார் வாகன சட்டத்தின் பிரிவு 3 r/w பிரிவு 181, 182 இன் கீழ் தண்டனைக்குரியது மற்றும் மேற்படி வாகனங்கள் காப்பீடு செய்யப்படவில்லை, இது மோட்டார் வாகன சட்டத்தின் பிரிவு 146 r/w பிரிவு 19 இன் கீழ் தண்டனைக்குரியது.

iii) மேற்படி ஓட்டுநர்களின் அலட்சியமே காரணம் என்பதால், மனுதாரர் பயணித்த காரின் உரிமையாளர் மற்றும் காப்பீட்டு நிறுவனத்தையும், டோவிங் வாகனத்தையும் தேவையான தரப்பினராகச் சேர்க்க வேண்டும் என்றும், மேலும் இது இல்லாத நிலையில், தேவையான தரப்பினர் சேரவில்லை என்ற அடிப்படையில் மனு தள்ளுபடி செய்யப்படும்.

iv) மேலும், மனுதாரர், விபத்துப் பதிவேடு, விபத்து வரைபடம் மற்றும் சம்பந்தப்பட்ட காவல்துறையால் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகை போன்ற மிக முக்கியமான ஆவணங்களை சமர்ப்பிக்காததற்கு எந்தவொரு வலுவான காரணங்களையும் மனுதாரர்கள் வழங்கத் தவறிவிட்டனர் என்றும், ஆவண சான்றுகள் மற்றும் சுயாதீன வாய்மொழி சான்றுகள் மூலம், 02-05-2015 முதல் அவர் ஒரு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார், பின்னர் பல்வேறு தனியார் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டார் என்பதற்கான ஆதாரத்தை மனுதாரர் நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார் என்றும், முதுகில் எலும்பு முறிவுகள் மற்றும் அவரது உடல் முழுவதும் பல கடுமையான காயங்கள் ஏற்பட்டதற்கான ஆதாரத்தையும் மனுதாரர் முன் வைக்க வேண்டும் என்றும், மேலும், அரசாங்கத்தால் முறையாக அமைக்கப்பட்ட மருத்துவ வாரியத்தால், நிரந்தர இயலாமை அல்லது ஊனத்தால் பாதிக்கப்பட்டுள்ளார் என்பதற்கான ஆதாரத்தையும் மனுதாரர் முன்வைக்க வேண்டும் என்றும், இந்த 2ம் எதிர்மனுதாரர் கூற்றுப்படி, மனுதாரருக்கு எளிய காயங்கள் மட்டுமே ஏற்பட்டுள்ளது.

v) விபத்து நடந்ததாகக் கூறப்படும் நேரத்தில் அவர் சுமார் 42 வயதுடையவர் என்றும், மாதத்திற்கு ரூ.65,043/- சம்பாதித்தார் என்பதை இந்த 2ம் எதிர்மனுதாரர் மறுக்கிறார் என்றும், இந்த பிரதிவாதியின் கூற்றுப்படி, மனுதாரர் எங்கும் வேலை செய்யவில்லை என்றும், கூறப்படுவது போல் வருமான இழப்பு எதுவும் ஏற்படவில்லை என்றும் பத்தி எண்.21 இல் உள்ள பத்தி 1 மற்றும் 2இல் உள்ள பல்வேறு தலைப்புகளின் கீழ் செய்யப்பட்ட கூற்றுக்கள் மிகவும் மிகைப்படுத்தப்பட்டவை மற்றும் ஊக உணர்வில் செய்யப்பட்டவை.

vi) மேலும், இந்த விபத்து குறித்து கூடுதல் தகவல்களைப் பெறும்போதும், மோட்டார் வாகன சட்டத்தின் பிரிவு 170–இன் கீழ் கூடுதல் எதிர்மனுவை தாக்கல் செய்ய அனுமதி கோருகிறார் என்றும், வட்டி மற்றும் செலவுடன் ரூ.15,00,000/– கோரிக்கை தன்னிச்சையான கற்பனையானது மற்றும் எந்த அடிப்படையும் இல்லாதது என்றும், எனவே, இந்த மனுவை செலவுகளுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

**4**. 1ம் எதிர்மனுதாரர் சம்மன் சார்வு செய்யப்பட்டுள்ள நிலையில் நீதிமன்றத்தில் அழைத்தும் வருகையின்மையால் 27.11.2019–ம் தேதியன்று தோன்றாதரப்பினராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

**<u>4. பிரச்சனை</u>**:–

1. இந்த வழக்கு விபத்து யாருடைய அதிவேகத்தாலும், அஜாக்கிரதையாலும் ஏற்பட்டது?

2. மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் யார்?

3. மனுதாரர் இழப்பீடு பெற உரிமையுள்ளவரா, அவ்வாறெனில் அவருக்கு எவ்வளவு இழப்பீடு கிடைக்கதக்கது?

**5.** மனுவில் மனுதாரர் தரப்பில் அலமேலுமங்கை என்பவர் **ம.சா.1**ஆக விசாரிக்கப்பட்டும், மனுதாரர் தரப்பில் **ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.14** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், திருவாரூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலிருந்து பெறப்பட்ட ஊனச்சான்றிதழ் **சா.சா.ஆ.1**ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆதித்ய விஷ்வா, நிர்வாக அதிகாரி, நியூ இந்தியா அசூரன்ஸ் கம்பெனி **எ.ம.சா.1** ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் **எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.3** வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. ரீட்டா, இளநிலை உதவியாளர், RTO Office என்பவர் **எ.ம.சா.2**ஆக சாட்சியம் அளித்துள்ளார். இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது.

**6. <u>பிரச்சினை எண்.1க்கு தீர்வு:–</u>**

இம்மனுவில் தீர்க்கப்பட வேண்டிய மேற்படி பிரச்சனை குறித்து எழுந்துள்ள மெய்ப்பிக்கும் சுமையை தீர்க்கும் பொருட்டு மனுதாரர் அலமேலுமங்கை என்பவர் ம.சா.1ஆக சாட்சியம் அளித்துள்ளார். மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் வழிக்காட்டுதலின்படி மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோரும் மனுவில் விபத்து நடந்த விதம் பற்றி மனுதாரர் குற்றவியல் வழக்கை போல சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்ய வேண்டிய அவசியமில்லை. தன்னுடைய வழக்கின் சாத்திய கூறுகளின் மேம்பட்ட நிலையை (Preponderance of Probabilities) நிரூபணம் செய்தாலே போதுமானதாகும்.

**7. ம.சா.1 தனது சாட்சியத்தில்**

" கடந்த 02.05.2015ம் தேதி அதிகாலை 1.00 மணியளவில் பதிவு எண்.TN 04 J 9393 என்ற காரில் பயணியாக பயணம் செய்தேன். மேற்படி கார் முத்துப்பேட்டை மெயின் ரோடு பைபாஸ் சாலை அருகில் சென்ற போது நான் பயணம் செய்த கார் பழுதடைந்துவிட்டதால் மேற்படி காரை சாலை விதிகளை அனுசரித்து சாலை ஓரம் நிறுத்திவிட்டு மற்றொரு கார் பதிவு எண்.TM 10 E 2265 என்ற காரை மேற்படி காருடன் டோ செய்து

கொண்டிருந்த போது அது சமயம் பின்னால் வந்த TN 31 AJ 6798 என்ற பதிவெண் கொண்ட டேங்கர் லாரியை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து சாலை ஓரம் நிறுத்தியிருந்த காரின் மீது மோதியதில் எனக்கு பலத்த காயங்கள் ஏற்பட்டன. " என சாட்சியம் அளித்துள்ளார்.

8. **ம.சா.ஆ.1**ஆன முதல் தகவல் அறிக்கை

" அய்யப்பன் த/பெ.பன்னீர் வடக்குத்தெரு, கீழத்துறைக்குடி, திருநெல்லிகாவல், நான் திருநெல்லிகாவல், கீழத்துறைக்குடியில் வசித்து வருகிறேன். கார் டிரைவராக வேலை பார்த்து வருகிறேன். எங்கள் ஊரை சேர்ந்த பவுஜில்ராஜா திருநெல்வேலியில் குடும்பத்துடன் தங்கி வேலை பார்த்து வருகிறார். எங்கள் ஊர் கோவில் திருவிழாவிற்கு அவருக்கு சொந்தமான TN 04 J 9393 இண்டிகா காரில் 01.05.2015ம் தேதி இரவு 10.00 மணியளவில் முத்துப்பேட்டை செம்படவான்காடு அருகில் வரும்பொழுது கார் பழுதாகிவிட்டதால் அவர் ஊருக்கு போனில் தகவல் சொன்னதன்பேரில் அவரது மைதுனர் பேட்டன்பவுல் அவரது கார் TN 10 E 2265 இண்டிகா என்னிடமும், சுதாகரிடமும் கொடுத்து டோ பன்னி அழைத்து வருங்கள் என்று சொன்னதால் நாங்கள் கயிறுடன் சென்று TN 04 J 9393 காரை எங்கள் காரில் கட்டி 02.05.2015ம் தேதி அதிகாலை 1.00 மணியளவில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி கோவிலூர் நால்ரோட்டிற்கும் கிழக்கில் வரும்பொழுது கயிறு அவிழ்ந்துவிட்டது ஓரமாக நிறுத்தி இன்டிகேட்டரை போட்டுவிட்டு கயிரை கட்டி மீண்டும் புறப்பட

முற்படும்பொழுது எங்க காருக்கும் பின்னால் வந்த டேங்கர் லாரி, TN 04 J 9393 காரின் மீது மோதி காரில் ஏறி வந்த என் மீதும் மோதிவிட்டது. எங்க கார் கட்டி இழுத்த TN 10 E 2265 –ன் மீது மோதியதில் அந்த கார் ரோட்டை விட்டு கீழே பள்ளத்தில் வீசப்பட்டது. மேற்படி விபத்தில் எனக்கு இடது கால் முறிந்துவிட்டது, இடது சோல்டர் மற்றும் பல் கொட்டிவிட்டது. TN 10 E 2265 என்ற காரை ஓட்டிய சுதாகருக்கும், அந்த காரில் இருந்த அலமேலு மங்கைக்கும் காயம் ஏற்பட்டுவிட்டது. வெளிச்சத்தில் பார்க்கும்பொழுது எங்கள் மீது விபத்தை ஏற்படுத்திய லாரி – TN 31 AJ 6798 என்ற எண்ணுள்ள டேங்கர் லாரி ஆகும். "

மேலும், ம.சா.1–ன் வாய்மொழி சாட்சியம் ம.சா.ஆ.1ஆன முதல் தகவல் அறிக்கை, ம.சா.ஆ.2ஆன காயச்சான்று, ம.சா.ஆ.11ஆன மருத்துவ செலவினங்கள், ம.சா.ஆ.12ஆன டிஸ்சார்ஜ் சம்மரி மற்றும் சா.சா.ஆ.1 ஆகிய ஆவணங்களின் அடிப்படையில் பார்க்கும்போது இந்த வழக்கில் மனுதாரருக்கு விபத்தினால் காயம் ஏற்பட்டது என்றும், மேற்படி விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் (ரமேஷ் என்பவரின்) அதிவேகமும், அஜாக்கிரதையும் கவனக்குறைவு தான் இவ்விபத்திற்கு காரணம் என்று இத்தீர்ப்பாயம் முடிவுக்கு வந்து 1–வது பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

9. <u>பிரச்சனை எண்.2க்கு தீர்வு :–</u>

இம்மனுவில் விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 31 AJ 6798 என்ற எண்ணுள்ள டேங்கர் லாரியை ஓட்டிய ஓட்டுநர் தான் என்று மேற்கண்டவாறு தீர்வுகாணப்பட்டுள்ள நிலையில், மனுதாரருக்கு

இழப்பீட்டு தொகை செலுத்த வேண்டிய பொறுப்பு எந்த எதிர்மனுதாரருக்கு உள்ளது என்பது குறித்து நாம் இங்கு பரிசீலிக்க வேண்டி உள்ளது. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் **எ.ம.சா.1**ஆக ஆதித்ய விஸ்வா என்பவர் அவருடைய சாட்சியத்தில் " TN 04 J 9393 பதிவெண் கொண்ட காரை தான் சென்ற TN 10 E 2265 என்ற பதிவெண் கொண்ட காரின் பின்னால் கட்டி இழுத்து வந்தபோது பழுதான கார் கட்டப்பட்டு இருந்த கயிறு அறுந்ததால் அதே சாலையில் பின்னால் வந்த மற்றொரு நான்கு சக்கர வாகனமான TN 31 AJ 6798 என்ற லாரி மீது மோதி விபத்து ஏற்பட்டுள்ளது. மேலும், பழுதான வாகனத்தை இழுந்து வரும் வாகனத்தில் மனுதாரர் எந்த காரணமும் இன்றி பயணம் செய்து இந்த விபத்தை தனக்கு தானே வரவழைத்து கொண்டுள்ளார் என்றும், மேலும் தமிழ்நாடு மோட்டார் வாகன விதி எண்.396ன் கீழ் ஒரு வாகனம் பழுதடைந்தால் அதை இழுத்து வரும் வாகனம் என்ன விதிமுறைகளை பின்பற்ற வேண்டும் என தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதை மீறி எந்த விதிமுறைகளையும் பின்பற்றாமல் வந்த மேற்படி TN 04 J 9393 என்ற பதிவெண் கொண்ட காரின் ஓட்டுநரும் TN 10 E 2265 என்ற மற்றொரு காரின் ஓட்டுநரும் தான் இந்த விபத்திற்கு முழு பொறுப்பாவார்கள். மாறாக எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு இருந்த TN 31 AJ 6798 என்ற லாரியின் ஓட்டுநர் எவ்விதத்திலும் காரணம் அல்ல. மேலும் மேற்படி லாரி ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமத்தில் கனரக வாகன வில்லை (BADGE) இல்லை. இது எங்கள் நிறுவனத்துடன் உள்ள காப்பீடு நிபந்தனைகளை மீறிய செயல். எனவே மனுதாரருக்கு எங்கள் நிறுவனம் எவ்வித இழப்பீடும் வழங்க கடமைப்பட்டதல்ல. " என சாட்சியம் அளித்துள்ளார். 2ம் எதிர்மனுதாரர் சாட்சியத்தை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்ததில்

பழுதான கார் கட்டப்பட்டு இருந்த கயிறு அறுந்தது என்பதற்கு எவ்வித சாட்சி மற்றும் சான்றாவணங்களை 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் முன்னிலைப்படுத்தவில்லை என்பதால் எ.ம.சா.1–ன் வாதம் ஏற்கதக்கதல்ல என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

ii) மேலும், விபத்திற்கு காரணமான TN 31 AJ 6798 என்ற டேங்கர் லாரி வாகனமானது 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது என்பது **ம.சா.ஆ.10** ஆவணமான வாகன பதிவு சான்றிதழிலிருந்து அறியமுடிகிறது என்றும், அந்த வாகனம் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்திடம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதும் இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாகும். மேற்படி வாகனத்திற்கான காப்பீடு 26.07.2014 முதல் 25.07.2015 வரை அமலில் இருந்துள்ளது என்பதை **ம.சா.ஆ.7** ஆணவமான பாலிசியின் மூலம் அறியப்படுகிறது. ஆனால், 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமத்தில் கனரக வாகன வில்லை (BADGE) இல்லை என 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்ட எ.ம.சா.1 சாட்சியத்தில் கூறியுள்ளதை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்து பார்த்ததில் கீழ்கண்ட முன் தீர்ப்பின் அடிப்படையில் தீர்வு காண விரும்புகிறது. **IN THE SUPREME COURT OF INDIA CIVIL APPELLATE JURISDICTION, CIVIL APPEAL NO.5826 OF 2011 , MUKUND DEWANGAN … APPELLANT(S) VERSUS ORIENTAL INSURANCE COMPANY LIMITED … RESPONDENT(S)** மொத்த வாகன எடை 12,000 கிலோகிராமுக்கு அதிகமாக இருந்தால் அந்த வாகனம் "கனரக சரக்கு வாகனம்" என தீர்வு கண்டுள்ளதை பின்பற்றி இந்நீதிமன்றம் மேற்கண்ட விபத்து தீர்ப்பாய மனுவில் உள்ள டேங்கர் லாரி வாகனங்கள் பொதுவாக, 42–47.5–டன் வரையிலான மொத்த வாகன

எடையைக் கொண்டுள்ளதான் அடிப்படையில் மேற்படி விபத்தில் ஈடுபட்ட வாகனத்தின் எடையை கொண்டு **HM**V ஓட்டுநர் உரிமம் வைத்திருந்தால் மட்டுமே லாரி போன்ற கனரக சரக்கு வாகனங்களை ஓட்டலாம் என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. ஆகையால் 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநர் **HM**V ஓட்டுநர் உரிமம் இல்லாமல் LMV ஓட்டுநர் உரிமத்தை பயன்படுத்தி கனரக சரக்கு வாகனத்தை ஓட்டி பாலிசி நிபந்தனைகளை மீறியுள்ளார் என்பது தெளிவாகிறது. இந்நிலையில் வழக்கின் சம்பவமானது 02.05.2015–ம் தேதி அன்று நடைபெற்றுள்ளது என்பதும், மேலும் இந்த விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 31 AJ 6798 என்ற பதிவெண் கொண்ட டேங்கர் லாரியை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து விபத்து ஏற்பட்டுள்ளது என்பதாலும், 1ம் எதிர்மனுதாரருடைய வாகனமானது 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு காப்பீடு நிலுவையில் இருந்தாலும் மனுதாரருக்கு செலுத்தப்பட வேண்டும் என இத்தீர்ப்பாயம் நிர்ணயம் செய்யும் இழப்பீட்டு தொகையினை விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் காப்பீட்டாளர் என்ற முறையில் 2ம் எதிர்மனுதாரர் செலுத்த வேண்டும் என்றும், மேற்படி 2ம் எதிர்மனுதாரர் செலுத்தும் தொகையினை **காப்பீட்டு விதிமீறல்** (கனரக வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் இன்றி ஓட்டுநரிடம் ஓட்டி சென்றதால் தான் இந்த விபத்திற்கு காரணம்) புரிந்த வாகனத்தின் உரிமையாளரான 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து இதே வழக்கு நடவடிக்கையில் பெற்றுக்கொள்ள அனுமதி வழங்கி உத்தரவிட வேண்டும் என 2வது பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

10. <u>பிரச்சனை எண்.3க்கு தீர்வு</u>

இந்த மனுவில் மனுதாரர் அலமேலுமங்கை என்பவர் ம.சா.1ஆக விசாரிக்கப்பட்டும், ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.14 வரையிலான சான்றாவணங்களை தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனுதாரர் தரப்பு சாட்சியத்திலிருந்தும், ஆவண சாட்சியத்திலிருந்தும் மனுதாரருக்கு கழுத்து எலும்புகள் பாதிக்கப்பட்டு எலும்பு முறிவு ஏற்பட்டு முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்டது என்றும், மற்றும் உடம்பு முழுவதும் சிராய்ப்பு காயங்கள் ஏற்பட்டன என்றும், உடனே அடிபட்ட மனுதாரரை திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனைக்கு சென்று முதலுதவி சிகிச்சை செய்து அதன் பின்னர் திருவாரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை செய்து கொண்டார் என்றும், பின்னர் மனுதாரர் மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் MVK மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு அங்கு 04.05.2015ம் தேதி முதல் 10.05.2015ம் தேதி வரை உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார் என்றும், அதன் பின்னர் விடுவிக்கப்பட்டு நாளது வரை அதே மருத்துவமனையில் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றுவருகிறார் என்பது தெரியவருகிறது. மனுதாரருக்கு ஏற்பட்ட ஊனத்தின் அளவை கணக்கிட மருத்துவ போர்டுக்கு அனுப்பப்பட்டார். அவரை பரிசோதித்த குழுமம் வழங்கிய அறிக்கையில் மனுதாரருக்கு 10% ஊனம் ஏற்பட்டதாக கருத்து கூறி **சா.சா.ஆ.1**ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதை இந்நீதிமன்றம் கணக்கீட்டிற்காக எடுத்துக் கொள்ளப்படுகிறது. **மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின்** M.Chinnathambi Vs. S.Dheepa and another, 2020(1) TN MAC 617-**ல்**

வழங்கியுள்ள முன் தீர்ப்பு நெறிகளை மேற்கோள்காட்டி 1 சதவீத ஊனத்திற்கு ரூ.5,000/- வீதம் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதை பின்பற்றி அதன்படி ஒரு சதவீத ஊனத்திற்கு ரூ.5000/- வீதம் கணக்கிட்டு மனுதாரருக்கு ஏற்பட்டுள்ளது 10% என்பதால் (10%x5000) அவர் 50,000/- இழப்பீடாக இந்த தலைப்பின் கீழ் பெற உரிமையுள்ளவர் ஆவார். மனுதாருக்கு வலி, வேதனை இருந்திருக்கும் எனவே வலி, வேதனை என்ற தலைப்பின் கீழ் அவருக்கு ரூ.15,000/-ம் வழங்கிட இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது. மனுதாரர் விபத்து சமயத்தில் திருநெல்வேலி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைகழகத்தில் உதவி பேராசிரியராக வேலை செய்து மாதம் ரூ.65,043/- வருமானம் ஈட்டி வந்ததாக மனுவில் சொல்லப்பட்டுள்ளதை நிரூபணம் செய்ய மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.14 ஆவணமான சம்பள பட்டியல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது ஆனால் அந்த குறிப்பு என்பது மேற்படி விபத்திற்கு பின்னிட்டு ஏற்பட்ட மே மாதம் 2016 ஆண்டின் சம்பள பட்டியல் என்பது தெளிவாகிறது என்பதும், ஆனால் ம.சா.ஆ.9 ஆன வருமான வரி குறிப்புகள், ம.சா.ஆ.13 ஆன கல்லூரி அடையாள அட்டை மற்றும் ம.சா.ஆ.14ஆன சம்பள பட்டியல் ஆகிய ஆவணங்களை பரிசீலனை செய்ததில் மனுதாரர் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைகழகத்தில் உதவி பேராசிரியராக வேலை செய்து வந்தது நிரூபணமாகிறது என்பதால் மாதம் ஒன்றுக்கு ரூ.65,043/- குறைவில்லாமல் சம்பாதித்து இருப்பார் என்று இந்நீதிமன்றம் ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதன் அடிப்படையில் மனுதாரர் மாதம் ரூ.65,043/- வருமானம் ஈட்டியிருக்க கூடும் என்று முடிவு செய்து அவர் 3 மாதம் ஓய்வில் இருந்திருக்க வாய்ப்புள்ளது என்பதால் மனுதாரருக்கு ஏற்பட்ட வருமான இழப்பீட்டிற்காக (மாத வருமானம் 65043 x 3மாதம்)

ரூ.1,95,129/−மும், ஊட்டச்சத்து உட்கொண்ட வகையில் அவருக்கு ரூ.10,000/−ம், உதவியாளர் செலவிற்காக ரூ.10,000/−ம், போக்குவரத்து செலவிற்காக ரூ.10,000/−ம் மற்றும் வாழ்க்கை வசதி இழப்பீட்டிற்காக ரூ.5,000/−ம், மருத்துவ பில்கள் ரூ.1,67,847/−மும் என சொல்லப்பட்டிருந்தாலும், ரூ.1,15,635/−க்கான பில்கள் மட்டும் உள்ளதால் ரூ.1,15,635/− வழங்கலாம் என்று இத்தீர்ப்பாயம் நிர்ணயிக்கிறது. 115635

**12.** மனுதாரர் அலமேலுமங்கை என்பவருக்கு கீழ்க்கண்டவாறு இழப்பீட்டுத் தொகை கிடைக்கதக்கதாகும்.

| | |
|---|---|
| 10% நிரந்தர ஊனத்திற்கு (10%x5000) | ரூ.50,000/− |
| வலி வேதனைக்கு | ரூ.15,000/− |
| வருமான இழப்பீடுக்கு (65043x3) | ரூ.1,95,129/− |
| ஊட்டச்சத்து உணவு | ரூ.10,000/− |
| உதவியாளர் செலவு | ரூ.10,000/− |
| போக்குவரத்து செலவு | ரூ.10,000/− |
| வாழ்க்கை வசதி இழப்பீடு | ரூ.5,000/− |
| மருத்துவ பில்கள் | ரூ.1,15,635/− |
| மொத்தம் | ரூ.4,10,764/− |

**13.** இந்த மனுவில் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக மொத்தம் ரூ.4,10,764/− சரியான தகுந்த இழப்பீடு என முடிவு செய்து அதற்கு மனு

தேதியிலிருந்து தொகை வசூலாகும் வரை தவறுகையினால் தள்ளுபடியாக காலம் ஏதேனும் இருப்பின் அது நீங்கலாக மீதி காலத்திற்கு 7.5% வட்டியுடன் சேர்த்து வழங்கி உத்தரவிட முடிவு செய்யப்படுகிறது. மேற்படி இழப்பீட்டு தொகையானது நியாயமான தகுந்த இழப்பீட்டுத் தொகை எனவும் இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கிறது. மனுதாரருக்கான மேற்படி இழப்பீட்டு தொகையினை அவருக்கு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் The Divisional Manager, The Oriental Insurance Company Ltd., Kannur Vs. Rajesh & Others என்ற வழக்கில் 2016(1) TN MAC 433–ல் பிரசுரிக்கப்பட்ட முன்தீர்ப்பில் கண்ட வழிமுறைகளின்படி செலுத்த உத்தரவிட வேண்டியது அவசியமாகிறது. இவ்வாறாக பிரச்சனை எண்.3க்கு தீர்வு காணப்படுகிறது.

**14.** இறுதியாக, மனு செலவுத் தொகையுடன் பகுதியாக அனுமதிக்கப்பட்டும், ரூ.4,10,764/–ஐ, 2ம் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு இழப்பீடாக மனு தாக்கல் நாள் (25.04.2019) முதல் தொகை வைப்பீடு செய்யப்படும் நாள் வரை 7.5% வட்டியுடன் சேர்த்து இன்றிலிருந்து 2 மாதத்திற்குள் 2ம் எதிர்மனுதாரர் இந்நீதிமன்ற வங்கி கணக்கில் (தவறுகையினால் தள்ளுபடியான காலம் ஏதேனும் இருப்பின் அது நீங்கலாக) வழங்க வேண்டுமென்றும், மேற்படி இழப்பீட்டு தொகையை 2ம் எதிர்மனுதாரர் இந்நீதிமன்ற திருத்துறைப்பூண்டி ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா கணக்கு எண்.000000 42903368477 (IFSC Code SBIN0000936) கணக்கில் பணத்தை வைப்பீடு செய்துவிட்டு அவ்வாறு 2ம் எதிர்மனுதாரர் (காப்பீட்டு நிறுவனம்) செலுத்தும் இழப்பீட்டுத் தொகையினை காப்பீட்டு விதிமீறல் புரிந்த காரணத்திற்காக விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் உரிமையாளரான 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து இதே வழக்கு

நடவடிக்கையில்  வசூல் செய்து கொள்ளலாம் என உத்தரவிடப்படுகிறது. மேற்படி வைப்பீடு செய்யப்பட்ட தொகையை மனுதாரர் தன்னுடைய வங்கி கணக்கு நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உரிய நீதிமன்ற உத்தரவின்படி வங்கியின் NEFT/RTGS பரிவர்த்தனை மூலமாக பெற்றுக் கொள்ள வேண்டுமென்றும், மனுதாரரின் காயத்தின் தன்மையை கருத்தில் கொண்டும், விபத்தானது 2015–ல் ஏற்பட்டுள்ள காரணத்தினாலும் இழப்பீட்டு தொகை முழுவதையும் மனுதாரர் பெற்றுக் கொள்ளலாம் என்றும், மேற்படி இழப்பீட்டுத் தொகைக்குரிய மனுதாரர் செலுத்த வேண்டிய பற்றாக்குறை நீதிமன்ற கட்டணமாக ரூ.3107.64/– (முழுமையாக்கப்பட்ட தொகை ரூ.3108/–) உத்தரவு தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள் செலுத்த வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது. மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஊதியம் ரூ.11107.64/– (முழுமையாக்கப்பட்ட தொகை ரூ.11,108) என நிர்ணயம் செய்யப்படுகிறது. **மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் சோழ மண்டலம் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் –எதிர்– அய்யனார் மற்றும் ஒருவர் 2020 (4) CTC 272** என்ற வழக்கில் பிறப்பித்துள்ள உத்தரவின்படி இத்தீர்ப்பாயம் தீர்ப்பாணை எதுவும் வனைய வேண்டியதில்லை என தீர்மானிக்கின்றது.

என்னால் சுருக்கெழுத்தரிடம் வாய்மொழியாக  சொல்லப்பட்டு அவரால்  குறிப்பெடுக்கப்பட்டு, பின்னர் கணினியில் தட்டச்சு செய்யப்படடு பின் என்னால் சரிப்பார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 26ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M RAVICHANDRAN

Digitally signed by M RAVICHANDRAN
Date: 2026.03.31 13:49:07 +0530

இயக்கவூர்திகளின் விபத்து இழப்பீடு கோருரிமை,
தீர்ப்பாய நடுவர்/ சார்பு நீதிபதி, திருத்துறைப்பூண்டி.

**செலவுத் தொகை பட்டியல்**

| மனுதாரர் தரப்பு செலவுத் தொகை பட்டியல் | தொகை | |
|---|---|---|
| | ரூ. | பை. |
| நீதிமன்ற கட்டணம் | 3480 | 50 |
| வக்காலத்து கட்டணம் | 10 | 00 |
| நீதிமன்ற ஆவண கட்டணம் | 50 | 00 |
| வழக்கறிஞர் கட்டணம் | 11108 | 00 |
| சம்மன்படி | 9 | 00 |
| தட்டச்சு கூலி | 100 | 00 |
| மொத்தம் | 14757 | 50 |

(இம்மனுவின் செலவுத் தொகையான ரூ.14,758/—ஐ 2ம் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு செலுத்த உத்தரவிடப்படுகிறது.)

1. **மனுதாரர் தரப்பு சாட்சி**:—

ம.சா.1 அலமேலுமங்கை (மனுதாரர்)

2. **மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்**:—

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 02.05.2015 | முதல் தகவல் அறிக்கை — உண்மை நகல் |
| ம.சா.ஆ.2 | 02.05.2015 | காயச்சான்று — நகல் |
| ம.சா.ஆ.3 | 27.05.2017 | வாகன ஆய்வறிக்கை வேண்டி காவல் துறைக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு — (TN 31 AJ 6798 )— உண்மை நகல் |

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.4 | 30.05.2017 | அஞ்சல் ஒப்புதல் அட்டை – அசல் |
| ம.சா.ஆ.5 | 14.05.2015 | TN 04 J 9393 என்ற வாகனத்தின் வாகன ஆய்வறிக்கை – நகல் |
| ம.சா.ஆ.6 | 14.05.2015 | TN 10 E 2265 என்ற வாகனத்தின் வாகன ஆய்வறிக்கை – நகல் |
| ம.சா.ஆ.7 | 26.07.2014 | TN 31 AJ 6798 என்ற வாகனத்தின் காப்பீட்டு நகல் |
| ம.சா.ஆ.8 | 30.01.2015 | TN 04 J 9393 என்ற வாகனத்தின் காப்பீட்டு நகல் |
| ம.சா.ஆ.9 | -- | வருமான வரி குறிப்புகள் – நகல் (2ம் எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது. ) |
| ம.சா.ஆ.10 | -- | நான்கு சக்கர வாகனமான டேங்கர் லாரி ஆர்.சி.புக். (TN 31 aJ 6798 )– நகல் |
| ம.சா.ஆ.11 | -- | மருத்துவ செலவினங்கள் – 34 (எண்ணிக்கை ரூ.1,67,847) அசல் (2ம் எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது. ) |
| ம.சா.ஆ.12 | -- | டிஸ்சார்ஜ் சம்மரி – நகல் (2ம் எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது. ) |
| ம.சா.ஆ.13 | -- | கல்லூரி அடையாள அட்டை – நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. ) |

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.14 | மே 2016 | சம்பள பட்டியல் |

**3. சாட்சி சான்றாவணம்**:–

| | | |
|---|---|---|
| சா.சா.ஆ.1 | 08.01.2024 | திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வழங்கப்பட்ட ஊனச்சான்றிதழ் |

**4. 2ம் எதிர்மனுதாரர் சாட்சி :–**

| | |
|---|---|
| எ.ம.சா.1 | ஆதித்ய விஸ்வா (நிர்வாக அதிகாரி, நியூ இந்தியா அசூரன்ஸ் கம்பெனி, தஞ்சாவூர்) |
| எ.ம.சா.2 | ரீட்டா (இளநிலை உதவியாளர், RTO Office ) |

**5. 2ம் எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :–**

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 26.07.2014 | முதல் எதிர்மனுதாரரின் வாகன காப்பீடு – அலுவலக நகல் |
| எ.ம.சா.ஆ.2 | 14.05.2015 | TN 10 E 2265 பதிவு எண் கொண்ட வாகனத்தின் மோட்டார் வாகன அறிக்கை – நகல் |
| எ.ம.சா.ஆ.3 | 14.05.2015 | TN 04 J 9393 பதிவு எண் கொண்ட வாகனத்தின் மோட்டார் வாகன அறிக்கை – நகல் |

M RAVICHANDRAN

Digitally signed by M RAVICHANDRAN
Date: 2026.03.31 13:49:15 +0530

இயக்கவூர்திகளின் விபத்து இழப்பீடு கோருரிமை,
தீர்ப்பாய நடுவர்/ சார்பு நீதிபதி, திருத்துறைப்பூண்டி.